**செய்தி வெளியீடு எண்: 728** **நாள்: 29.10.2019**

**செய்தி வெளியீடு**

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 112ஆவது பிறந்த நாள் மற்றும் 57ஆவது குருபூஜை அரசு விழாவாக கொண்டாடப்படுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 112ஆவது பிறந்த நாள் மற்றும் 57ஆவது குருபூஜை விழாவினை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடத்தில் 30.10.2019 அன்று காலை 9.00 மணியளவில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தவுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் தமிழக அரசு, தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், இளம் பருவத்திலேயே தனது மனதிற்கு சரியெனப்பட்டதைத் துணிந்து செய்யும் துணிவும், உறுதியும் படைத்தவராய் வாழ்ந்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பிறந்தநாளான அக்டோபர் 30ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள், தமிழ்நாட்டின் தென்கிழக்கு மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி அருகிலுள்ள பசும்பொன் என்கிற சிற்றூரில் மிகுந்த வசதி படைத்த குடும்பத்தில் அக்டோபர் 30, 1908ஆம் ஆண்டு உக்கிரபாண்டித் தேவருக்கும், இந்திராணி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். இவரது தாயார் இவருக்கு ஒரு வயது நிரம்பும் முன்பே காலமானார். அது முதல் இவருக்கு தாய்ப் பால் ஊட்டி வளர்த்தவர் சாந்த பீவி என்ற இஸ்லாமிய அம்மையார்.

ஜமீன் குடும்பத்தில் பிறந்தாலும் தேவர் திருமகனார் ஜமீன் விவசாயிகள் படும் துயரையும், அவலத்தையும் நன்கு அறிந்தவர் என்பதால் அவர்களின் அல்லல்களை போக்குவதற்காக ‘தமிழ்நாடு ஜமீன் விவசாயிகள் சங்கம்’ என்ற அமைப்பை நிறுவினார். தென் தமிழ்நாட்டில் வாழும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரை ஒடுக்குவதற்காக ஆங்கிலேய அரசு அமல்படுத்திய ‘குற்றப் பரம்பரைச் சட்டம்’ என்ற கொடிய சட்டத்தை எதிர்த்து வெற்றி கண்டவர் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள். திருமணம் செய்து கொண்டால், தானும் இல்லற வாழ்வில் இணைந்து நாட்டுக்கு தொண்டாற்ற முடியாது என்று எண்ணி திருமணத்தை வெறுத்தார். மகான் விவேகானந்தரைப் போல் தேவர் பெருமகனார் அவர்களும் கடும் பிரம்மச்சாரியாகவே வாழ்ந்தார். நேதாஜி அவர்கள் 1937ஆம் ஆண்டு பார்வார்டு பிளாக் கட்சியைத் தொடங்கினார். ‘வேண்டிய விடுதலை விரைவில் வரவேண்டும்’ என்பதால்தான் முத்துராமலிங்கத் தேவர்

அவர்கள் பார்வார்டு பிளாக்கில் சேர்ந்து நேதாஜி அவர்களின் வழியில் நடக்கத் தொடங்கினார். நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினராக மக்கள் பணியாற்றிய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் 30.10.1963 அன்று இயற்கை எய்தினார்.

தமிழக அரசின் சார்பில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 112ஆவது பிறந்தநாள் மற்றும் 57ஆவது குரு பூஜை விழாவினை முன்னிட்டு, 30.10.2019 அன்று காலை 9.00 மணியளவில் இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அமைந்துள்ள முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் நினைவிடத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தவுள்ளார்கள். இந்நிகழ்வில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜூ அவர்கள், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. ஆர். காமராஜ் அவர்கள், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஓ. எஸ். மணியன் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள், மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ஆர். பி. உதயகுமார் அவர்கள், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் திரு. க. பாஸ்கரன் அவர்கள் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

மேலும், 30.10.2019 அன்று காலை 10.00 மணியளவில் தமிழக அரசின் சார்பில், சென்னை, நந்தனம் சந்திப்பில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச்சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மலர்தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள். இந்நிகழ்வில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**